**OS.1509/2024**

**Name:** R.Thilaka Mary (PW 1)

**Date**: 29.07.2025

(இன்று இந்த சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை )

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதி என் தம்பி. என் அப்பா பால்தாஸ் India Pistons என்ற நிறுவனத்தில plumber ஆக பணியில் இருந்தார். என் அப்பா வழக்கு சொத்தை காலி இடமாக தான் 1985 ல் கிரையம் வாங்கினார். வாங்கிய பிறகு ஓலை வீடு கட்டினார். 1991 ல் தளம் போட்ட வீடாக கட்டினார். மொத்த இடத்திலும் தளம் போட்ட வீடு கட்டினார். முதல் தளம் 1998 ஆம் ஆண்டு கட்டினார். அப்போது பிரதிவாதி வேலைக்கு செல்லவில்லை கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். முதல் மாடி கட்டிய போது பிரதிவாதி படித்துக் கொண்டே வேலை செய்தார் என்றாலும் அவருடைய பொருளுதவியை கொண்டு தான் முதல் தளம் கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா இருந்த போதே வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின் நானும் என் சகோதரிகளும் அவரவர் கணவர் இல்லத்தில் வசித்து வருகிறோம். நான் தற்போது அம்பத்தூர் ஒரகடம் பகுதியில் வசிக்கிறேன். பிரதிவாதி தான் வழக்கு சொத்தில் குடியிருக்கிறார் என்றால் பிரதிவாதி ஒரு பகுதியில் இருக்கிறார். என் அம்மா ஒரு பகுதியில் இருந்தார். நான் வழக்கு சொத்திற்கு வந்து போய் கொண்டிருக்கிறேன். அம்மா அப்பா கடைசி காலத்தில் பிரதிவாதி தான் அவர்களை பாரத்துக் கொண்டார் என்றால் எல்லோரும் சேர்ந்து பார்த்துக் கொண்டோம். என் அப்பா அம்மாவை கடைசி காலத்தில பிரதிவாதி தான் பார்த்துக் கொண்டார் என்றாலும் அதனால் வழக்கு சொத்தை நாங்கள் எல்லோரும் சேர்ந்து பிரதிவாதிக்கு தரவேண்டும் என்று பேசி முடிவு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Sd/- N.Vijayakanth, B.A, B.L.,

Dt.29.07.2025 II Addl. District Judge.